<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>
**M.C.O.P.No.2/2017**

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | S.பிரவீன்குமார் | வயது. | 28 |
| த.பெ. | சதாசிவம் | தொழில். | |
| முகவரி. | பரமகுடி தாலுக்கா, இராமநாதபுரம் | | |

<u>ம.சா.3, முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 3 ம் சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன். டிஸ்சார்ஜ் சம்மரி (எண்ணிக்கை:2) அசல் ம.சா.ஆ.16, மருத்துவக் குறிப்புகள் (எண்ணிக்கை: 8) அசல் ம.சா.ஆ.17, மருந்து பில்கள் (எண்ணிக்கை: 11) அசல் ம.சா.ஆ.18, எனது ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.19(அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது), மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.20-ஆக குறியீடு செய்யப்படுகிறது.
மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

12.10.2015 தில் மாலை 5.15 மணிக்கு விபத்து ஏற்ப்பட்டது. நான் Indicator போடாமல் வாகனத்தை திடீரென்று வளைத்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் Indicator போட்டு தான் வாகனத்தைதிருப்பினேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனக்கு ஏற்ப்பட்ட காயத்தை மிகைப்படுத்தி மனுவில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தான் தாக்கல் செய்த மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. முழுக்க முழுக்க என்னுடைய தவறால் தான் இந்த விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீட்டு தொகையும் தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. நான் அதிகமான இழப்பீடு கோரியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-S.பிரவீன்குமார்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.